**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 69/2024 - PW-4**

| | |
|---|---|
| Name | திரு. டில்லிபாபு |
| Husband/Father Name | ஜெயராமன் |
| Village /Area | ஜெ.எஸ். ராமாபுரம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | தனியார் நிதி நிறுவன ஊழியர் |
| Age | 33 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 17.07.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் சந்திரபாபு மற்றும் இறந்த அருண் ஆகியோர் 2021 ம் ஆண்டு சுமார் இரவு 09.45 மணியளவில் ஒயின் ஷாப்பிற்கு மது அருந்த சென்றோம். திரும்பி சுமார் 10.30 மணியளவில் பச்சையம்மன் கோவில் அருகே என்னையும் அருண் என்பவரையும் இறக்கிவிட்டு சந்திரபாபு வண்டி எடுத்து சென்றுவிட்டார். அப்போது மாயாண்டி மற்றும் சந்தோஷ் என்பவர்கள் மீன் வலை பின்னிக்கொண்டிருந்தார்கள் அவர்களுக்கும் இறந்த அருண் என்வருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அருண் என்பவரை பின் தொடர்ந்து சந்தோஷ் என்பவர் சென்றார். நான் அந்த இடத்தில் இருந்து சென்று விட்டேன். அங்கிருந்த மாயாண்டி என்பவர் என்னை வீட்டில் விடுகிறேன் என்று சொன்னார் நான் சிறிது தொலைவு எனது வாகனம் இருந்ததால் நான் நடந்து சென்று எனது வண்டியை எடுத்து சென்றுவிட்டேன். அதன் பிறகு மறுநாள் அருண்

என்பவர் பச்சையம்மன் கோவில் அருகே இறந்து கிடப்பதாக தகவல் தெரிந்தது. எதிரிகள் மீது சந்தேகம் பட்டு பூபதி என்பவரிடம் தெரிவித்தேன், இரண்டு நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நாங்கள் மொத்தம் 3 பேர் ஒயின் ஷாப் கடைக்கு சென்றோம். அது போன்று நாங்கள் வேலை இல்லை என்றால் தொடர்ந்து போவோம். எங்கள் மூவரிடையே எந்த விதமான மனஸ்தாபமும் இல்லை என்று சொன்னால் சரிதான். சந்திரபாபுவும் இறந்த அருண் என்பவரும் செய்யூர் அருகே உள்ள அவிநாசிக்கண்டிகையை சேர்ந்தவர்கள். நான் அருகில் உள்ள ஜே.எஸ்.இராமாபுரம் ஊரை சேர்ந்தவர். நாங்கள் தக்கோலம் ஒயின் ஷாப்பில் மது வாங்கிக்கொண்டு இறந்த அருண் உடைய விட்டிற்கு முன்னால் உள்ள அவிநாசிக்கண்டிகை பாலத்தின் மேலே அமர்ந்து சந்திரபாபும் அருணும் மது அருந்தினார்கள். அருண் உடைய வீட்டில் இருந்து சுமார் 20 அல்லது 30 மீட்டர் தொலைவில் உள்ள பாலத்தில் தான் சந்திரபாபுவும் அருணும் மது அருந்தினார்கள். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிப்பதால் தான் நான் முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் அமர்ந்திருந்த இடத்திற்கும் கோவிலுக்கும் இடைப்பட்ட தொலைவு சுமார் 60 முதல் 80 மீட்டர் இருக்கும். இந்த 200 அடி தொலைவிற்கு ஒருவரை இரு சக்கர வாகனத்தில் நான் அழைத்து சென்றேன் என்று கூறுவது தவறு என்று சொன்னால் நாங்கள் குடித்த இடத்திலேயே அருணை விட்டு விடுவதாக கூறியும் அவர் கேட்காததால் இரு சக்கர வாகனத்தில்

அழைத்து சென்றோம். எனக்கும் முதல் எதிரி சந்தோஷிக்கும் பண பரிவர்த்தனை இருந்தது என்றும் இந்த தேதி வரை ரூ.75 ஆயிரம் கொடுக்க வேண்டியிருந்தது என்றும் அதை கேட்டதால் அவருக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எப்போதும் போல் குடித்துவிட்டு நாங்கள் மூவரும் தனித்தனியே சென்று விட்டோம் என்றும் போலீசாரின் நிர்பந்தத்தின் பேரில் இறந்தவருக்கு பின்னால் சந்தோஷ் சென்றால் என்று நான் கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. போலீசார் என்னை சம்பவம் மறுதினம் இரவு 07.00 மணியளவில் என்னை அழைத்து சென்று விசாரித்தார்கள். காவல் நிலையத்திற்கு முதலில் நானும் சந்திரபாபுவும் சென்றோம். இரவு 10.00 முதல் 10.30 மணியளவில் மாயாண்டி காவல் நிலையத்திற்கு வந்தார். போலீசார் என்னிடம் வாய்மொழியாக என்ன நடந்தது என்று கேட்டு கொண்டு என்னை அனுப்பி வைத்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. மறுநாள் தான் அனுப்பிவைத்தார்கள். விசாரணையில் போலீசார் என்னிடம் சம்பவம் தொடர்பாக எப்படி நடந்தது என்று கேட்டதன் அடிப்படையில் நான் கூறினேன். அந்த நேரம் போலீசாரிடம் கம்பியூடர் அல்லது மடிக்கணினி இல்லை என்று சொன்னால் சரிதான். அன்று மட்டும் தான் விசாரித்தார்கள். நான் கூறுவது போல் 1ம் எதிரி சந்தோஷிற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் நிர்பந்ததின் பேரில் நான் அவருக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஒருவர் சென்ற திசையிலேயே அவரை பின் தொடர்ந்து சென்ற நபர் தான் மேற்படி குற்ற செயலை செய்தார் என்று சொல்ல முடியாது என்றால் முதல் எதிரி பின்தொடர்து சென்றதை நான் பார்த்தேன் ஆனால் அவர் அடித்ததை நான் பார்க்கவில்லை. சிறிது

தொலைவு சென்று நான் திரும்பி பார்த்த போது எதிரி சந்தோஷ் இறந்த அருணை இழுத்து வந்ததை நான் பார்த்தேன். இந்த விஷயத்தை நான் முதல் விசாரணையிலும் போலீஸ் விசாரணையிலும் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல அவ்வாறு தான் கூறினேன். முதல் விசாரணையில் கூறாத விஷயத்தை கூறிதை வைத்தே எனக்கும் முதல் எதிரிக்கும் உள்ள விரோதம் தெளிவாக தெரிய வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

**2–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரிகள் மீது சந்தேகப்பட்டு பூபதி என்பவரிடம் தெரிவித்ததாக முதல் விசாரணயைில் கூறியுள்ளேன் அதில் சந்தோஷ் என்பவர் மீது தான் சந்தேகம் இருப்பதாக கூறியிருந்தேன்.

**3–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரிகள் மீது சந்தேகப்பட்டு பூபதி என்பவரிடம் தெரிவித்ததாக முதல் விசாரணயைில் கூறியுள்ளேன் அதில் சந்தோஷ் என்பவர் மீது தான் சந்தேகம் இருப்பதாக கூறியிருந்தேன்.

**ஒம்./–திருமதி. கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**